THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, 24th February 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: *மின்சார இலாகா மந்திரி அவர்கள் ஊரில் இல்லாத காரணத்தினால் மின்சார இலாகா சம்பந்தமான கேள்விகள் எல்லாவற்றையும் நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம். இப்போது கேள்வி நம்பர் 440 எடுத்துக் கொள்ளப்படும்.*

Government Offices

* 440 *Q.*—**SRI S. M. ANNAMALAI**: *கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1960-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதியில் நட்சத்திரக் குறியிடாத கேள்வி எண் 376-க்கு அளித்த பதிலையொட்டி சர்க்கார் அலுவலகங்களுக்குக் கொடுக்கப்படும் வாடகையைத் தவிர்க்க சொந்த கட்டிடங்களில் அலுவலகங்களை நடத்த சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

THE HON. SRI P. KAKKAN: The proposal of the Chief Engineer, P.W.D. (General) for the construction of buildings in Madras City at an estimated cost of Rs. 76 lakhs for locating Government Offices which are now located in rented buildings is under the active consideration of Government. Proposals for the construction of similar buildings in District Headquarters are awaited from the Chief Engineer.

SRI S. M. ANNAMALAI: *சர்க்கார் எந்த எந்த அலுவலகங்களை மாவட்ட தலைநகரங்களுக்கு மாற்ற கட்டிடம் கட்டுவது பற்றி பரிசீலனையில் இருக்கிறது? எப்போது அது அமுலுக்கு வரும்?*

THE HON. SRI P. KAKKAN: *நான் முன்பு சொன்ன பதிலில் சொன்னேன். எந்த எந்த ஜில்லா தலைநகருக்கு அனுப்புவது பற்றி என்ஜினியர் ரிப்போர்ட்டை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.*

[24th February 1961

SRI S. M. ANNAMALAI : சென்னையில் உள்ள சில அலுவலகங்களை மாவட்டத் தலைநகரங்களில் மாற்றினால் செலவு குறையாதா? அதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப் போகிறார்கள்?

THE HON. SRI P. KAKKAN : எல்லாவற்றையும் தூரத்திற்கு அனுப்பிவிட்டாலும் கஷ்டமாக இருக்கும். ஆகவே எதை எதை எந்த எந்த இடத்தில் வைக்கவேண்டுமோ அங்கே வைக்கப் படுகிறது.

Groundnut cake

* 441 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total quantity of groundnut cake exported from the Madras State during the last two years;

(*b*) the price of groundnut cake per candy; and

(*c*) whether the groundnut cake produced in this State is enough to meet the requirements of this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*), (*b*) & (*c*) A statement [a] is placed on the table of the House.

SRI T. T. DANIEL : Whereas the groundnut oil cake produced in Madras is not enough to meet the requirements of the State, may I have from the Hon. Minister a statement regarding the policy of export of groundnut from this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, if the hon. Member puts a separate question, I can present a statement as asked for by him. It is no doubt correct to say that we have not sufficient groundnut oil cake to meet the requirements of the State for use both as cattlefeed and manure. We should also have some interest in the groundnut export trade. Whatever foreign exchange is secured by export is fully utilised for getting more chemical fertilisers from foreign countries.

SRI M. KALYANASUNDARAM : அந்நிய நாட்டுச் செலாவணி சம்பாதிக்க வேண்டுமென்பது அவசியம்தான். இருப்பினும் நம்முடைய விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டியது அதைவிட முக்கியமானது. கடலைப் பிண்ணாக்கின் விலையும் மூட்டை 20, 30 ரூபாய் என்று அதிகமாகிறது. ஆகவே விலையைக் குறைக்க ஏற்றுமதியைத் தடை செய்வார்களா? அல்லது விலையைக் குறைக்க வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப் பிரச்சனை அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டே நடவடிக்கை எடுக்கப் படுகிறது. கடலைப் பிண்ணாக்கு எப்படி விவசாயத்திற்கு அவசியமோ, அப்படியே அந்நியநாட்டுச் செலாவணியும் ரசாயன உரம் விவசாயத்திற்காக வாங்குவதற்கு அவசியமாக இருக்கிறது.

---

[a] Printed as Appendix I on page 489 infra.